# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
# DEVAKOTTAI

**CC.No.115/2022**

Deposition of witness for Prosecution அ.சா.6

| | | |
|---|---|---|
| பெயர் | : | முருகேசன் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | பெரியகருப்பன் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 04.08.2026

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது தச்சவயலில் வசித்து வருகிறேன். பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். காவல் நிலையத்திற்கு ஒரு வேலையாக சென்றபோது வாங்கினார்கள். **(மேற்படி பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து அ.சாஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத் தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அனுமதி கேட்டதன்பேரில் இந்நீதிமன்றம் அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

கடந்த 25.01.2022 ம் தேதி தேவகோட்டை நகர காவல் நிலைய சார்பு ஆய்வாளர் விசாரணை செய்தபோது கடந்த 25.01.2022 ம் தேதி காலை 11.00 மணிக்கு ராம்நகர்

அருகே குற்ற சம்பவம் நடந்ததாக சொல்லி சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றும் அவர் தயார் செய்த பார்வை மகஜரில் 2 வதாக கையெழுத்து போட்டுவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.